ARTICLE 38 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00084
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 63–73
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

தென்மாவட்ட சிற்றிலக்கியப் படைப்பாளிகளின் இயற்கைநேயவுணர்வு

Nature-Centred Consciousness of Sitrilakkiyam Authors in Southern Tamil Nadu

முனைவர்.பத்ம பிரியா மா[1,*]

[1]தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி, சிவகாசி., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.பத்ம பிரியா மா — tamilseminar12@gmail.com
ORCID: முனைவர்.பத்ம பிரியா மா https://orcid.org/0000-0003-4419-6503

Abstract

This study examines the representation of the southern Tamil landscape in Mukkoodarp Pallu and Thirukkutralak Kuravanji, two significant minor literary works associated with the Pandyan region. Mukkoodarp Pallu, generally dated to the seventeenth century, reflects the agrarian life, folk traditions, regional dialect, and cultural practices of the people of the Tirunelveli region. In contrast, Thirukkutralak Kuravanji, attributed to Melakaram Thirikooda Rasappa Kavirayar and dated to the late seventeenth or early eighteenth century, portrays the natural wealth and cultural identity of the Courtallam region through the voice of the Kurathi. Both works demonstrate a strong relationship between literature and landscape by documenting agricultural practices, varieties of paddy, cattle and birds, crops, water resources, rainfall, floods, and the fertility of the land. The geographical settings of Mukkoodal (present-day Seevalaperi) and Courtallam further establish the connection between literary expression and regional identity. The sacred landscapes associated with Azhagar at Mukkoodal and Thirikoodanathar at Courtallam reveal the integration of nature, agriculture, spirituality, and community life. Thus, these works serve not merely as literary compositions but also as valuable cultural records that preserve the ecological consciousness, agrarian heritage, and distinctive identity of the southern Tamil land.

ஆய்வுச் சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சார்ந்த சிற்றில்கிய நூல்கள் 'முக்கூடற்பள்ளு' மற்றும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' ஆகும். இச்சிற்றிலக்கியங்கள் தென்தமிழக நிலப்பரப்பை இயற்கை வருணனையுடன் சித்தரிக்கின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. பொதுவாகப் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் 'முக்கூடற்பள்ளு', திருநெல்வேலிப் பகுதி மக்களின் வேளாண் வாழ்க்கை, நாட்டுப்புற மரபுகள், வட்டார வழக்கு மற்றும் கலாச்சார நடைமுறைகளை வெளிப்படுத்துகின்றது. இதற்கு மாறாக, மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' (பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது), குற்றாலப் பகுதியின் இயற்கை வளம் மற்றும் பண்பாட்டு அடையாளத்தை 'குறத்தி'யின் குரல் வழியாகச் சித்தரிக்கிறது. இவ்விரு நூல்களும் வேளாண் முறைகள், நெல் வகைகள், மாடு மற்றும் பறவை இனங்கள், பயிர்கள், நீர்நிலைகள், மழைப்பொழிவு, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலத்தின் வளம் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதன் மூலம் இலக்கியத்திற்கும் நிலப்பரப்பிற்கும் இடையிலான வலுவான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. முக்கூடலின் (தற்போதைய சீவலப்பேரி) புவியியல் அமைப்பும் குற்றாலத்தின் அமைப்பும் இலக்கிய வெளிப்பாட்டிற்கும் வட்டார அடையாளத்திற்கும் இடையிலான தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்றன. முக்கூடலில் உள்ள அழகர் மற்றும் குற்றாலத்தில் உள்ள திரிகூடநாதர் ஆகியோருடன் தொடர்புடைய புனித நிலப்பரப்புகள், இயற்கை, வேளாண்மை, ஆன்மீகம் மற்றும் சமூக வாழ்க்கை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை உணர்த்துகின்றன. எனவே,

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

இவ்விலக்கியங்கள் வெறும் படைப்புகளாக மட்டுமல்லாமல், தென்தமிழகத்தின் சூழலியல் உணர்வு, வேளாண் மரபு மற்றும் தனித்துவமான அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் மதிப்புமிக்க கலாச்சார ஆவணங்களாகவும் திகழ்கின்றன.

Keywords / திறவுச் சொற்கள்: முக்கூடற் பள்ளு; திருக்குற்றாலக் குறவஞ்சி; பாண்டியநாடு; தென்தமிழ் நிலப்பரப்பு; வேளாண்மை.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மா, மு. பி. (2026). தென்மாவட்ட சிற்றிலக்கியப் படைப்பாளிகளின் இயற்கைநேயவுணர்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

முன்னுரை

தென்மாவட்ட சிற்றிலக்கியப் படைப்பாளர்களான திரிகூடராசப்பக்கவிராயர் மற்றும் பெயர் தெரியாத முக்கூடற்பள்ளு ஆசிரியரின் மண்ணின் மீதான நேசத்தைக் கூறுவதே திருக்குற்றாலக்குறவஞ்சி மற்றும் முக்கூடற்பள்ளு எனலாம். முக்கூடற்பள்ளு எழுதப்பட்ட காலம் கி.பி.1680 ஆம் ஆண்டு என்று இலக்கிய ஆவணம் குறிப்பிடப்படுகின்றது. பள்ளு இலக்கியம் நாட்டுப்புற இசைப்பாடல் தன்மை உடையது. இதனை இயற்றியவர் பெயர் அறியப்படவில்லை என்று இலக்கியவரலாறு குறிப்பிட்டாலும்,ஒருசிலர் இயற்றியவர் என்னயினாப் புலவர் எனக் கூறுவர்.நூலில் திருநெல்வேலி பகுதிசார் மக்களின் வட்டார வழக்கை ஆங்காங்கே காணலாம்.பண்ணையார் என்ற நிலவுடைமையாளர்களிடம் வேலைசெய்யும் உழவுத்தொழில் மக்களின் இலக்கியமாக முக்கூடற்பள்ளு அமைந்தள்ளது. மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக்குறவஞ்சியில் இடம்பெறும் குறத்தி என்னும் குறி சொல்லும் மரபினர் மலைதேசத்தின் பூர்வீககுடிகள் ஆவர். திருக்குற்றாலக் குறவஞ்சியின் காலம் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 18ஆம்நூற்றாண்டின் முற்பகுதி என்பர். குற்றால மலையின் வளம் அதன் இயல்பு நிலைகளில் பொருத்தப்பட்டு சூழலியல் நலத்துடன் பாடப்பட்டுள்ளன. பள்ளு,குறவஞ்சி இயற்கை வளத்தை எடுத்துரைக்கும் பாங்கில் எழுந்தன என்று கருத்துரைக்கும் பான்மையில் உழவுத்தொழில்,நெல்வகைகள்,மீன்வகைகள்,பறவை வகைகள்,பயிர்கள் பெருக்கம், நீர்ப்பெருக்கம், மழையின் வரவு, வெள்ளப்பெருக்கு என நிலத்தின் விளைபொருட்களைப் பட்டியலிடும் பாங்கு இயற்கையின் மேன்மை கூறவனவாக அமைந்துள்ளது எனலாம்.

பள்ளு,குறவஞ்சியில் தென்னக மண்ணின்அடையாளங்கள்

திருநெல்வேலிக்கு வடகிழக்கே சித்திரா நதி, கோதண்டராம நதி ஆகிய இரு நதிகளும் தாமிரபரணி ஆற்றில் கலக்கும் இடம் முக்கூடல் என்றழைக்கப்பட்டது. இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் அழகர் என்னும் தெய்வத்தின் மீது பாடப்பட்டதே முக்கூடற் பள்ளு ஆகும். முக்கூடற் பள்ளு என்பது இடத்தால் பெற்ற பெயராகும். முக்கூடல் இன்று சீவலப்பேரி என்று குறிக்கப்படுகிறது. பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன் கி.பி. 12- ஆம் நூற்றாண்டில் தன் பெயரில் ஓர் ஏரி கட்டினான். அது ஸ்ரீவல்லபன் ஏரி எனப்பெயர் பெற்றது. இதனால் இவ்வூர் சீவலப்பேரி என வழங்கப்படுகிறது. இங்கு மூவேந்தர் கல்வெட்டுக்களுடன் கூடிய

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

தொன்மையான திருமால் கோயில் உள்ளது. இங்குக் கோயில் கொண்டிருக்கும் திருமாலை 'அழகர்' என்றும் 'செண்டு அலங்காரர்' என்றும் முக்கூடற் பள்ளு புகழ்ந்து போற்றுகின்றது.

குற்றாலம் என்பது தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் தென்காசி வட்டாரத்தில் உள்ள ஊர் ஆகும். இந்த இடத்தில் குறும்பலா மரத்தின் அடியில் எழுந்தருளியுளள் ஈசனுக்கு பாடல்பாடப்பெற்றுள்ளது. இந்த இறைவனுக்குத் திரிகூடநாதர் என்ற பெயரும் உண்டு. இந்த இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இந்நூல் ஆகும். முக்கூடற்பள்ளு,திருக்குற்றாலக்குறவஞ்சி இரண்டுமே பாண்டிய தேசத்தின் மண்அடையாளங்களைக் கொண்டுள்ளது எனலாம்.

இயற்கை

இயற்கை என்பது இயல்பானது. மனித ஆற்றலின்றி தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்.

> நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம்"1 (தொல்காப்பியம்,மரபியல்.நூற்பா.90)

இயற்கையின் இயல்பு நிலைகளாக நிலம்,நீர்,தீ,காற்று,ஆகாயம் என்ற ஐந்தும் கலந்த மயக்க நிலைப்பாடு என்று தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளது. இயற்கை என்ற சொல்லிற்கு "இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை"2 என்று கழக அகராதி விளக்கமளிக்கின்றது. (கழக அகராதி ப.114) "இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை"3 என்று கௌரா தமிழ் அகராதி பொருண்மை சுட்டுகின்றது.க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் விளக்கமாவது, "மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலைநீர்) போன்ற பொருள் அல்லது (மழைநீர், இடி,காற்று) போன்ற சக்தி."4 என்பதாகும். கீழ்கண்ட ஆங்கில அகராதி விளக்கப்படி

"இயற்கை *(nature)* என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை என்கின்றோம். உயிரினம், உயிரின அறிவு போன்றவையும் இயற்கையில் அடங்கும். பொதுவாக இயற்கையை ஆய்வு செய்வதென்பது அறிவியலின் மிகப்பெரிய ஒரு பகுதியாகும். மனிதர்களும் இயற்கையின் ஒரு பகுதியே ஆவர். "5 என்று இயற்கை குறித்து முழுமையான விளக்கம் அளிக்கின்றது.மேலும்,இயற்கை என்ற பதத்திற்கான ஆங்கிலச் சொல் தோன்றிய தன்மையானது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"இயற்கை என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் நேச்சர்*(nature)* என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. நேட்சுரா என்ற இலத்தீன் சொல்லின் அடிப்படையில் தருவிக்கப்பட்டது தான் நேச்சர் என்ற ஆங்கில சொல்லாகும். இதன் பொருள் அவசிய குணங்கள், பிறவிக்குணம் என்பதாக அறியப்படுகிறது. பண்டைய இலக்கியங்களில் பிறவி அல்லது பிறப்பு என்று இதற்கு பொருள் கொள்ளப்பட்டிருந்தது. "6 என்பர். மேற்கண்ட விளக்கங்களில் இருந்து இயற்கை என்பது இயல்புநிலை என்பதே ஆகும்.

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

பூமியில் இயல்பாக தோன்றிய அனைத்தின் தன்மை குறித்தும் அறிவியலார் பின்வருமாறு வரையறுக்கின்றனர்.

இயற்கை என்பது உயிருள்ள மற்றும் உயிரற்ற தொகுதிகளின் கலவையாகும். இயற்கை வளங்களை இதனடிப்படையில் தான் பிரித்தரிவர்.உயிருள்ளவை என்பது உயிர்க்கோளத்திலிருந்து வருவிக்கப்படுபவை. உதாரணமாக காடு மற்றும் காடு சார்ந்த பொருட்கள், விலங்குகள் ஆகும். உயிரற்றவை என்பது உயிரற்ற கூறுகளான நீர் நிலம் வளி என்பவற்றிலிருந்து வருவிக்கப்படுபவை ஆகும்.

மரம், செடி, கொடி, புற்கள் போன்றவற்றைக் குறிக்கும் ஒரு பெரும் உயிரினப் பிரிவை தாவரம் (Plant) அல்லது நிலைத்திணை என்பர். இவ்வகை உயிரினங்கள் ஓரிடத்திலுருந்து மற்றோர் இடத்திற்கு தானே நகராமல் இருப்பதால் இவைகளை நிலைத்திணை என்பர். கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் எல்லா உயிரினங்களையும் இருவகையாகப் பிரித்துள்ளார். அவை தாவரங்கள் (நிலைத்திணை), விலங்குகள் (நகர்திணை) என இரு பெரும் பிரிவுகளாகும்.இத்தகைய இயற்கையின் பான்மையை இலக்கியத்தில் கூறுபவர்கள் இயற்கையியல்வாதிகள் ஆவர். பண்டைய மக்களின் ஐவகை நிலத்து வாழ்வியலை குறிஞ்சி(மலை), முல்லை(காடு), மருதம்(வயல்), நெய்தல்(கடல்), பாலை(மணல்) என்று இயற்கைப் பின்னணி அமைத்துப் பாடியுள்ளமை சங்கப்பாக்களில் வெளிப்படுகின்றன.

இயற்கையியல்

இயற்கையியல் என்பதனை ஆங்கிலத்தில் நேச்சுரலிசம்(Nataralism) என்பர். நேச்சுரலிசம் என்ற சொல்லுக்குப் பொருள் "இயற்கையின்படி இருப்பது அல்லது இயங்குவதும்" என்பதாகும். 'இயற்கையியல்' என்பது இலக்கியஇயக்கமாக படைப்பாளர்களால் வளர்ந்துள்ளது. இயற்கையில் படைப்பு என்பது எவ்வாறு அமையுமெனில், கலை அல்லது இலக்கியத்தில், வாழ்க்கையை ஒரு குறிக்கோள் முறையில் தீட்டிக்காட்டாமல், இயற்கையில் உள்ளபடியே முழுமையாகத் தீட்டிக்காட்டும் முயற்சியாகும். குறிப்பாக இயற்கையியல் படைப்பாளர்கள் இயற்கை என்னும் தூரிகையால் தம் படைப்பை எடுத்துரைப்பர். அவ்வகையில் முக்கூடற்பள்ளு இயற்றிய படைப்பாளியும், திருக்குற்றாலக் குறவஞ்சி எழுதிய திரிகூடராசப்பக் கவிராயரும் இயற்கைத் தூரிகையில் எழுதுகோலை நனைத்துள்ளனர் எனலாம்.

காயக் கண்டது சூரிய காந்தி
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்
சீவல மங்கைத் தென்கரை நாடே. (முக்கூடற்பள்ளு.22)

முக்கூடற்பள்ளுவில் இடம்பெறும் இவ்நாட்டு வருணணைப் பாடலில் மனிதவாழ்வியலின் நடத்தை உணர்வுகள் இயற்கையின் பண்புகளுடன் ஒப்புமை செய்யப்பட்டுள்ளன. தென்கரைநாட்டில் வாழும் மக்களுக்குத் துன்பம் இல்லை என்பதை உரைக்க நினைத்த படைப்பாளி வெம்மையில் தகிப்பது சூரியகாந்தி மலர் மட்டுமே என்கிறார். மக்களிடம் மனஅமைதியிழந்த மருட்சி ஏற்பட்டதில்லை என்பதை உரைக்க வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் அபாய நீர்ச்சுழிகள் மட்டுமே நம்மால் பார்க்க இயலும் என்கிறார். வாழ்க்கையில் வீழ்ந்தேன் எனும் நிலை

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

அங்குள்ள மக்களிடம் இல்லை எனக்கூற விளைந்து குலைசாய்வது செந்நெல் மட்டுமே என்கிறார். இத்தகைய இயற்கை வழியிலான காட்சிநிலை பண்புநிலை விளக்கம் குற்றாலக் குறவஞ்சியிலும் இடம்பெற்றுள்ளது.

நெருங்கக் காண்பது கன்னலில் செந்நெல்;

தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து; வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை ஈசர் ஆரிய நாடு எங்கள் நாடே.

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;

வருந்தக் காண்பது சூல்உளை சங்கு; போடக் காண்பது பூமியில் வித்து; திருக்குற்றாலர் தென் ஆரிய நாடே (திருக்குற்றாலக் குறவஞ்சி.56)

மேற்கண்ட பாடலில் செந்நெல்,மாம்பழக்கொத்து,கொல்லையின் முல்லை என்று விளைச்சல் முன்னிறுத்தப்பட வாழ்வியல் நடத்தைகள் பொருத்தப்பட்டுள்ளது. அதனைப்போன்றே வெள்ளம், சங்கு, வித்து என்று நீர்வளத்துடன் கூடிய இயற்கை வேளாண்மை வளம் முன்னிறுத்தப்படவே படைப்பாளி முயற்சித்துள்ளார்.

”செயற்கை யறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்”7 (அதிகாரம்:அமைச்சு குறள் எண்:637)

என்று திருவள்ளுர் சுட்டும் “இயற்கையறிந்து செயல்” என்பது பள்ளு,குறவஞ்சியில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன எனலாம். குற்றாலக்குறவஞ்சியில் இடம்பெறும் பாத்திர விளக்க வருணணையிலும் இயற்கை உவமைகள் இயல்பாக சுட்டப்பட்டுள்ளன.

செங்கையில் வண்டு கலின் கலின் என்று செயம் செயம்
என்றாட
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே! (திருக்குற்றாலக் குறவஞ்சி.பாடல்)

வசந்தவல்லி பந்தாடும் பாடலில் வண்டு ரீங்காரமிடும் ஒலிக்குறிப்பு சுட்டப்பட்டுள்ளது.பசுமையான கொடியின் தன்மையில் பெண்ணின் உடல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.மேலும்,

குறிஞ்சி பூத்த
காட்டுவளங் குழல்காட்டும் மலைவளந்தா னீயுரைத்துக்
காட்டு வானேன்? (திருக்குற்றாலக் குறவஞ்சி.பாடல்.45)

என்று வசந்தவல்லி குறத்தியிடம் மலைவளம் நாட்டுவளம் கேட்கும் பாடல்கள் அனைத்தும் குறிஞ்சிநிலத்து இயற்கைவளத்தொகுப்பாகும். குறவஞ்சியில் இடம்பெறும் பாத்திரங்களான வசந்தவல்லி,குறத்தி,சிங்கன் ஆகிய மூவரும் இயற்கை போற்றும் பாங்கினராக படைப்பாளரால் உருவாக்கப்பெற்றுள்ளனர்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
..... குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே;

(திருக்குற்றலாக்குறவஞ்சி,பாடல். 44)

முக்கூடற்பள்ளு சிற்றிலக்கியத்தில் மருதமெனும் வயலின் உழவுத் தொழில் பாடப்பட்டுள்ளது. உழவுத் தொழிலுக்கு அடிப்படையான

நீர்வரத்து(மழை),முளைவித்து (விதை), மாடுகள் பற்றியும் விரிவான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆற்று வெள்ளம் நாளை வரத்

தோற்றுதே குறி - மலை யாளமின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்று அடிக்குதே - கேணி நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடுகுதே சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்று அடைக்குதே - மழை தேடி ஒருகோடி வானம் பாடி யாடுதே (முக்கூடற்பள்ளு. 30)

முக்கூடற்பள்ளுவில் இடம்பெறும் மேற்கண்ட மழைக்கான அறிகுறிப் பாடல் உழவுத்தொழிலுக்கான அடிப்படை நீர் என்பதை முன்னிறுத்துகின்றது.

”விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.”8
”நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். ”9
” நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.“10

என்று நீரின் இன்றியமையாமை குறித்து திருவள்ளுவர் சிற்றிலக்கிய காலத்திற்கு முன்பே கூறியமை ஒப்புநோக்கத்தக்கது. மேலும் இச்சிற்றிலக்கியம் மூத்தபள்ளி,இளையபள்ளி எனும் பெண்பாத்திரங்கள் வாயிலாக மருதநிலத்து இயற்கைவளத்தில் நீர்வளம் குறித்தே மிகையாகப் பேசுகின்றது எனலாம். திருநெல்வேலியின் வடகிழக்கே பாயும் சித்திரா நதி மற்றும் கோதண்டராமநதி ஆகிய இரு நதிகளும் தாமிரபரணிஆற்றில் கலக்கும் இடம் தான் முக்கூடல் ஆகும்.இத்தகைய நீர்நிலையின் மீது அமைந்திருக்கும் ஊர் என்பதால் இந்நூல் நீர்ப்பெருக்கத்தைப் பாடியுள்ளது எனலாம்.

வேளாண் விதைகளும் உயிரினப் பதிவுகளும்

பள்ளு,குறவஞ்சி எனும் இரு சிற்றிலக்கியங்களும் உழவர்,குறவர் என்று உழைக்கும் விளிம்புநிலைமக்களின் பதிவுகள் என்பதால் உழவுத்தொழிலையும் மலைவாழ் மக்கட் தொழிலையும் பதிவுசெய்யத் தவறவில்லை. உழவுத்தொழில் குறித்து ”ஏரோர் களவழி அன்றி களவழி தேரோர் தோற்றிய வென்றியும்”11 (தொல்காப்பியம்,பொருளதிகாரம்,புறத்திணையியல்.75) என்பது ஏரின் வாழ்வாராகிய உழவரது தொழிலை யொத்துப் போர்மறவர் நிகழ்த்தும் போர்த் தொழிலை உருவகித்துப் போர்க்களத்தைப் புகழ்ந்து பாடும் துறையாகும் என்று தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.மேலும்,பன்னிருபாட்டியல் விளக்கத்தில் உழத்திப் பாட்டும் பள்ளு இலக்கியத் தோற்றத்திற்குக் காரணம் எனச் சுட்டப்பட்டுள்ளது. உழத்திப் பாட்டு என்பது உழவுப் பெண்களின் பாடல் என்று பொருள்படும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ” ஏர் மங்கலம், முகவைப் பாட்டு”12 என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய பழங்கால வேளாண்சமூகத்துப் பழக்கவழக்கங்களை முக்கூடற்பள்ளு பதிவுசெய்துள்ளது.சீரகச் சம்பா, நெடுமூக்கன், மூங்கிற் சம்பா,

கருங்குறுவை, புனுகுச் சம்பா, பூம்பாளை முதலிய இருபதுக்கும் மேற்பட்ட நெல்விதை வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சித்திரக் காலி வாளாண் சிறை மீட்டான் மணல்வாரி
செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா
முத்து விளங்கி மலை முண்டன் பொற்பாளை நெடு
மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா
கத்தூரி வாணன் கடைக கழுத்தன் இரங்கல் மீட்டான்
கல்லுண்டை பூம்பாளை பார்கடுக்கன் வெள்ளை
புத்தன் கருங்குறுவை புனுகுச் சம்பா (முக்கூடற்பள்ளு. 109).

விதைகள் குறித்த வேளாண்மைக் கலைச் சொல்லாக இதனை அறிய முடிகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள தாவரங்களின் பெயர்களை சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள் என்னும் நூலில் ஆய்வாளர் இரா.காஞ்சனா பதிவுசெய்துள்ளார்.இந்நூல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பதிப்புத்துறையினரால்,1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.இந்நலில் பள்ளு இலக்கியம் குறிப்பிட்டுள்ள நெல்வகைகளின் தாவரவியல் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது.

உழவு மாடுகள் உழவர்களின் செல்வம் ஆகும். மாடு என்பதற்கு செல்வம் என்றே பொருள் கூறுவர். பசு மாடு, எருமை மாடு,காளை மாடு என்ற வகைப்பாடு மட்டுமே தற்காலத்தில் அறியப்படுகிறது. பசு என்பது பெண்ணினம்,காளை என்பது ஆணினத்தையும் குறிக்கும். ஆனால் பசு என்பதற்கு “ஆ, பசு, ஆன், கோ, குடஞ்சுட்டு, சுரபி, தேனு, கபிலை, சேதா, குரம், கோமளம் ” போன்ற சொற்கள் திவாகர நிகண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.ஆயினும் மறைந்து போன மாட்டின் வகைகள் பள்ளு இலக்கியத்தில் காணப்படுகின்றன.

குடைக் கொம்பன் செம்மறையன் குத்துக் குளம்பன் மேழை

குடைச் செவியன் குற்றாலன் கூடு கொம்பன் வடர்ப் புல்லை கரும்போரான் மயிலை கழற்சிக் கண்ணன் மட்டைக் கொம்பன் கருப்பன் மஞ்சள் வாலன் படப்புப் புடுங்கி கொட்டைப் பாக்கன் கருமறையன் பசுக்காலன் அணிற்காலன் படலைக் கொம்பன் விடர்த்தலைப் பூ நிறத்தான் வெள்ளைக் காளையும் இந்த உண்டு ஆயிரமே! (முக்கூடற்பள்ளு. 110).

இதனைப்போன்றே பறவை இனங்கள் பலவற்றையும் திருக்குற்றாலக் குறவஞ்சி பதிவு செய்துள்ளது..

வருகினுமையே பறவைகள் வருகினுமையே
குருகும் நாரையும் அன்னமும் தாராவும்
கூழைக் கடாக்களும் செங்கால் நாரையும்
காடை வருகுது, கம்புள் வருகுது
காக்கை வருகுது; கொண்டைக் குலாத்தியும்
மாடப்புறாவும் மயிலும் வருகுது
மற்றொரு சாரியாய் கொக்குத் திரள் எல்லாம்

வெள்ளைப் புறாவும் சகோரமும் ஆந்தையும்

மீன்கொத்திப் புள்ளும் மரங்கொத்திப் பட்சியும் கிள்ளையும் பஞ்சவர்ணக் கிளிக் கூட்டமும் கேகயப் பட்சியும் நாகணவாய்ச்சியும்

உள்ளானும் சிட்டும் வலியானும் அன்றிலும் (திருக்குற்றாலக் குறவஞ்சி.பாடல்.79)

வேட்டுவர்களின் வாழ்வியலில் பறவைகளின் பட்டியலும் சிங்கன் வாயிலாக அறியப்படுகின்றன. பி. எல். சாமி என்கிற பி. லூர்துசாமி என்னும் ஆய்வாளரால் சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் என்னும் நூல் 1976ஆம் ஆண்டு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசைத்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்டது. ”இந்நூலில் பறவைகளின் தோற்றம், வாழிடங்கள், உணவு, வாழ்முறைகள் முதலியன பற்றியஅரிய செய்திகள் உள்ளன. பறவையினங்களின் தமிழ்ப்பெயர்களும், அவற்றிற்கான ஆங்கிலப் பெயர்களும், அறிவியல் வகைப்பாட்டுப் பெயர்களும் தந்துள்ளார்.”13 சங்க இலக்கியத்தில் காணப்படும் மொத்தம் 62 பறவைகளைப் பற்றியதே இந்நூல். இதே நூல் பின்னொரு பதிப்பாக *சங்க இலக்கியத்தில் பறவையின விளக்கம்* என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. இதனை சங்க இலக்கியச் செய்திகளையும் தற்கால பறவையியல் கருத்துக்களையும் சேர்த்துத் தரும் முதல் நூல் எனலாம். மேலும்,கானுயிர் வல்லுநரான மா. கிருஷ்ணன் 2010 ஆம் ஆண்டு எழுதிய மழைக்காலமும் குயிலோசையும் என்னும் நூல் தியோடர் பாஸ்கரனின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும்.

பள்ளு மற்றும் குறவஞ்சி சிற்றிலக்கியம் தொழில்நிலையால் வேறுபட்ட மக்களின் வாழ்வியலைச் சுட்டுகின்றது. மக்கள் தங்கள் வாழ்விடத்திற்கு ஏற்ற தொழிலை கையாண்டுள்ளனர். ”தொழில்நிலையாலும் பொருள் வளத்தாலும் வேறுபடும் மக்களைப் பற்றி பல இலக்கிய வகைகள் உள.வயல் வேலை செய்யும் பள்ளர்கள் பற்றி உழத்தி பாட்டு,பள்ளு ஆகியனவும்.குறி கூறும் பணிசெய்யும் குறவர்கள் பற்றி குறத்தி பாட்டு,குறவஞ்சி,குறம் ஆகியனவும் உள”14 (ந.வீ.செயராமன்,தமிழ் இலக்கிய வகைகள் தோற்றமும் வளர்ச்சியும்,ப.46) ஆதலால்,இவ்விலக்கியங்கள் அவர்களின் தொழில்முறை சார் உயிரினங்களையும் பதிவுசெய்கின்றது.மருத நிலத்தில் உள்ள நீர்நிலைகளில் மீன்பிடித்தொழில் நிகழ்ந்துள்ளது.மீன்களின் பெயர்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

குற்றாலத் திரிகூட மால்வரை உற்றே மேகம் பொழிந்த நீர்
கூடப் பொருநை நாடித் திருமுக்கூடல் பதியை வலம் கொண்டே
வற்றா மடுவில் பறவை, குறவை, வாளை, கோளை, தேளி மீன்,
மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆரால், ஓரா மீன்,
பற்றா அயிரை, கெண்டை, கெளிறு, பருவராலும் அணையிலே
பாய, காலில் பாய, குளத்தில் பாய, வயலில் பாயவே
சிற்றாறு என்பது பெற்றாலும் ஒரு சிறியவர் மனப் பெருமைபோல்
சித்திரா நல் நதி பெருகி வாற சித்திரம் பாரும் பள்ளீரே!(முக்கூடற்பள்ளு.51)

குற்றால அருவியைத் தன்னுள்ளே கொண்டது திரிகூட மலை. அந்த மலையின் சிகரங்களில் தங்கிய மேகங்கள் மழை பொழிகின்றன. நீர்ப்பெருக்கு வெள்ளமாகப் பரந்து ஓடுகிறது. தாமிரபரணி ஆற்றோடு கலந்து,அங்குள்ள குளங்களில் நிறைகின்றன. நீர்நிலைகளில் வாழும் பறவை மீன், குரவை மீன், வாளை மீன், கோளை மீன், தேளி மீன், மயிந்தி மீன், உழுவை மீன், அயிந்தி மீன், கூனி மீன், மணலி மீன், ஆரால் மீன், ஓரா மீன், கைகளில் பிடிக்கமுடியாத அயிரை மீன், கெண்டை மீன், கெளுத்தி

மீன், பெரிய வரால் மீன் போன்ற பலவகை மீன்கள் சித்திரா நதி வாழ்விகளாகப் பட்டியலிடப்படுகின்றன. குற்றாலத்தின் குறிஞ்சி நிலவளம் பக்திஇலக்கியத்திலும் போற்றப்பட்டுள்ளன.

”வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பால் நெய்யோ டாட லமர்ந்தான் அலர்கொன்றை“15
(திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குற்றாலப் பதிகம்,1.99.1)

”இருந்த விடம்வினவி லேலங்கமழ் சோலையின
வண்டியாழ்செய்
குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்
குறும்பலாவே.”16
(திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குறும்பலா பதிகம்,1.071.1)

குறிஞ்சி மலைவளம்,நீர்வளம் பெருகிய இவ்வூரினை இறைவனின் அற்புததலமாகப் பாராட்டுகின்றது பக்திஇலக்கியம். ”இவ்வூருக்கு வழங்கப்படும் வேறு பெயர்களாகத் தலபுராணத்தில் குறிப்பிடப்படும் பெயர்கள்:பிதுர் கண்டம் தீர்த்த, புரம்சிவத்துரோகம், தீர்த்த புரம்மதுவுண்டான் உயிர் மீட்ட புரம், பவர்க்க மீட்ட புரம், வசந்தப் பேரூர்முதுகங்கை வந்த புரம், செண்பகாரணிய புரம், முக்தி வேலி, நதிமுன்றில் மாநகரம், திருநகரம், நன்னகரம், ஞானப்பாக்கம், வேடன் வலஞ்செய்த புரம், யானை பூசித்த புரம், வேத சக்தி பீட புரம், சிவ முகுந்த பிரம புரம், முனிக்கு உருகும் பேரூர், தேவகூட புரம், திரிகூடபுரம், புடார்ச்சுனபுரம், குறும்பலா விசேட புரம்.”17 என்பதாகும். மலைநாட்டில் பிறந்த படைப்பாளியின் பின்னணி அவர்சார்ந்த இயற்கையின் இயல்புணர்வை அவ்வாறே பதிவுசெய்துள்ளது எனலாம்.மேலும், இயற்கை சார்ந்த இயற்கையியல் படைப்பாளர் திரிகூடராசப்பக்கவிராயர் என்பதற்கு பின்வரும் பாடல்களே மிகச்சிறந்த சான்றாகும்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
……. (திருக்குற்றலாக்குறவஞ்சி,பாடல்.54)
முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்.
…….
வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே.

(திருக்குற்றலாக்குறவஞ்சி,பாடல்.55)

குறிஞ்சி நிலத்து இயற்கை படைப்பாக்கத்தில், அங்குள்ள நிலையுயிர் (தாவரங்கள்), இயங்குயிர்(விலங்குகள்) இயல்பாக இடம் பெற்றுள்ளன எனலாம்.

முடிவுரை

முக்கூடற் பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் இரண்டு பிரபந்தமும் வட்டார இலக்கியப் பண்புகள் கொண்டதால் எளிய மக்களின் வாழ்விலை அவர்களின் இயற்கை சார்ந்த பின்னணியுடன் தந்துள்ளது. உழவுத்தொழில் செய்யும் மக்களின் வயல்சார்ந்த பதிவுகளைக் கொண்டு, மழைவளம், நீர்ப்பெருக்கு, நெல்வகைகள்,மீன் வகைகள், மாடு வகைகள் என முக்கூடற்பள்ளு இயற்கைசார்ந்தும், உயிரின வளம் சார்ந்தும்

அமைந்தள்ளது. திரிகூட ராசப்பக் கவிராயர் குறவர் வாழ்வியல் பின்னணியாக மலைக்காட்டின் தன்மை, செடி,கொடி என பலகைப்பட்ட பறவைகளின் தொகுப்புரைத்து உணவுவளத்தின் பெருக்கமும் அதனூடான உயர்திணை, அஃறிணை இன்பநிலை என்று எடுத்துரைத்தள்ளார். நிலையுயிர்,இயங்குயயிர்களின் கலைக்களஞ்சியம் போன்று இயற்கையின் மொழியாக பள்ளு,குறவஞ்சி அமைந்துள்ளது எனலாம்.

அடிக்குறிப்புகள் (Notes)

1. தொல்காப்பியம்,மரபியல்.நூற்பா.90.
2. கழக அகராதி ப.114.
3. கௌரா தமிழ் அகராதி
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
5. Harper, Douglas,Online Etymology Dictionary.
6. Guthrie, W.K.C. Presocratic Tradition from Parmenides to Democritus (volume 2 of his History of Greek Philosophy) Cambridge UP, 1965.
7. திருக்குறள்,அமைச்சு, குறள்.637
8. திருக்குறள்,வான்சிறப்பு குறள்.16
9. மேலது, குறள்.17
10. மேலது, குறள்.20
11. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,புறத்திணையியல்.75.
12. சிலப்பதிகாரம்,நாடுகாண் காதை, 125 :134- 137.
13. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்,ப.1
14. ந.வீ.செயராமன், சிற்றிலக்கியச்செல்வம்,ப.46
15. திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குற்றாலப் பதிகம்,1.99.1
16. திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குறும்பலா பதிகம்,1.071.1
17. சொ.சுப்பிரமணிய கவிராயர், திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும், பக்.35,36.

துணைநூற் பட்டியல் (References)

1. மேலகரம் மகாகவி திரிகூடராசப்பன் கவிராயர், திருக்குற்றாலக்குறவஞ்சி, திருக்குற்றாலநாதர் கோயில் வெளியீடு,ஸ்ரீ மீனாட்சி பிரஸ்,தென்காசி.ஐந்தாம் பதிப்பு,1953
2. ந. சேதுரகுநாதன்(உ.ஆ),முக்கூடற் பள்ளு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், வெளியீடு, 1/140, பிரகாசம் சாலை, சென்னை-1, 1973.
3. இளம்பூரணம்(உ.ஆ), தொல்காப்பியம்,பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1969.
4. வ.சுப.மாணிக்கம்,திருக்குறள் தெளிவுரை,மணிவாசகர் பதிப்பகம்.31,சிங்கர் தெரு,பாரிமுனை,சென்னை.2006.
5. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ),சிலப்பதிகாரம் மூலமும் உரையும்(முழுமையும),சாரதா பதிப்பகம்,திருச்சி.2011.
6. சொ.சுப்பிரமணிய கவிராயர், திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.
7. பி.ரா. நடராசன்(உ.ஆ),திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (1,2,3 திருமுறைகள்),உமா பதிப்பகம்,சென்னை.
8. பி. எல். சாமி, சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1976.

9. இரா.காஞ்சனா,சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,பதிப்புத்துறை வெளியீடு,மதுரை.1998
10. மா.கிருஷ்ணன் மொ.ஆ), தியோடர் பாஸ்கரன்(தொ.ஆ), மழைக்காலமும் குயிலோசையும்,காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்.2010
11. ந.வீ.செயராமன் சிற்றிலக்கியச்செல்வம்,மணிவாசகர் நூலகம்,சிதம்பரம்.1979.
12. கழக அகராதி
13. கௌரா தமிழ் அகராதி
14. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
15. Harper, Douglas,Online Etymology Dictionary.
16. Guthrie, W.K.C. Presocratic Tradition from Parmenides to Democritus (volume 2 of his History of Greek Philosophy) Cambridge UP, 1965.

© 2026 முனைவர்.பத்ம பிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..